[4th March 1958

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

THE HON. SRI R. VENKATARAMAN : I have some information here which I think I can give.

MR. SPEAKER : All right. I have no objection.

THE HON. SRI R. VENKATARAMAN : பீளமேட்டிலுள்ள பி.எஸ்.ஜி. அண்டு சாரிடபிள் இனஸ்டிட்யூட்டில் சிறு கருவிகள் செய்வதற்காக லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூரிலுள்ள அப்பாய் மெஷின் டூல்ஸ் (ப்ரைவேட்) லிமிடெட் என்னும் ஸ்தாபனத்திற்கும் ஒரு லைசன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. அடிசன் கம்பெனியாருக்கு இம்மாதிரி சிறுகருவிகள் செய்வதற்கான லைசன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது.

Primary Health Centre

* 190 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state the number of Primary Health Centres opened during the year 1957–58, district-war?

THE HON. SRI M. A. MANICKAVELU : A statement [a] is placed on the table of the House which refers to the number of centres sanctioned for being opened.

SRI P. G. MANICKAM : இந்த ஜாப்தாவில் தெரிவிக்கப்பட்டிருக்கும் 45 சுகாதார நிலையங்களிலும் டாக்டர்கள், சுகாதார இன்ஸ்பெக்டர்கள், சுகாதார பார்வையாளர்கள், போன்றவர்கள் வேலை செய்கின்றார்களா ? அல்லது அப்படிப்பட்ட சிப்பந்திகள் இல்லாமல் இன்னும் எத்தனை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன என்று அறியலாமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த ஜாப்தாவிலே கண்டுள்ள சில ஆஸ்பத்திரிகள் இன்னும் திறக்கப்படக்கூட இல்லை. காரணம் அவைகளுக்கு வேண்டிய டாக்டர்கள் கிடைக்காததுதான்.

SRI M. P. SUBRAMANIAM : ஆரம்ப சுகாதார நிலையங்கள் சாதாரணமாக நகரத்திற்குப் அப்பால் கிராமங்களில் அமைக்கப்படுவதால், நல்ல முறையிலே இயங்கவில்லை என்பதினால், அவைகளை பக்கத்திலுள்ள தாலூக்கா தலைமை ஆஸ்பத்திரியோடு இணைத்தால் நல்லது என்ற அபிப்பிராயம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா ? அப்படி இணைக்கப்படுமானால், தலைமை ஆஸ்பத்திரிகளிலுள்ள மருந்துகள் மொபைல் வான்கள் மூலம் அனுப்பப்படுவதற்கு சாத்தியமாகும் என்பதையும் அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மூலை முடுக்குகளிலே இருக்கும் கிராமங்களுக்கு வசதி கொடுக்கவேண்டும் என்பது முக்கியமான கருத்து. ஆனால், கிராமங்களிலே வைத்தியர்கள் போய் இருப்பது கஷ்டமாக இருக்கிறது. அதனால் அரசாங்கம் " நான்-ப்ராக்டிஸிங் " அலவன்ஸை 50-லிருந்து 100 ரூபாயாக்கியிருக்கிறோம். இந்தத் திட்டம் எவ்வளவு தூரம் பிரயோஜனப்படுகிறது என்று பார்ப்போம்.

SRI A. VEDARATHNAM : கனம் மந்திரி அவர்கள், ' பல நிலையங்கள் இன்னும் திறக்கப்படவே இல்லை ' என்று குறிப்பிட்டார்கள். திறந்த பிறகும் பல நிலையங்கள் டாக்டர் இல்லாமல் இன்னும் காலியாக இருக்கின்றனவா ? அப்படியானால் எத்தனை நிலையங்கள் இருக்கின்றன ? அவற்றில் டாக்டர்களை நியமித்து வேலை செய்வதற்கு என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

---

a Printed as Appendix II on pages 231–232 infra.

4th March 1958]

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படித் திறக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளும் டாக்டர் இல்லாததால் மூடப்பட்டிருக்கின்றன. சில இடங்களிலே கம்பவுண்டர்கள் அவர்களாலான சிகிச்சையும் செய்கிறார்கள்.

SRI S. LAZAR : இந்த ப்ரைமரி ஹெல்த் ஸெண்டருக்குத் தேவையான மருந்துகளைத் தொடர்ந்து சப்ளை செய்யப்படுவதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Will you kindly repeat your question?

MR. SPEAKER : The hon. Member may please repeat his question.

SRI S. LAZAR : So far as Primary Health Centres are concerned, what is the arrangement made by the Government to supply the required medicines continuously and under whose administration, they will be given?

THE HON. SRI M. A. MANICKAVELU : The District Medical Officer will be in overall charge of these Primary Health Centres. The main difficulty is about securing medical officers; there is no difficulty about medicines.

SRI P. G. MANICKAM : டாக்டர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறதென்று நினைக்கிறபடியால், எம்.பி.பி.எஸ். பரீட்சையில் தேறியவர்களை ஒன்றிரண்டு வருஷங்கள் இத்தகைய சென்டர்களில் வேலை பார்க்கவேண்டுமென்று உத்தரவைப் பிறப்பிக்க சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதையும் யோசனை செய்தோம். எம். பி. பி. எஸ். பரீட்சையில் தேறியவுடனே அவர்களை இத்தகைய ப்ரைமரி ஹெல்த் சென்டர்களில் போட்டால், எவ்வளவு தூரம் நன்றாகப் பயன்படும் என்பது சந்தேகத்திற்குரியது. புதிதாகத் தேறி வந்தவர்களை இங்கெல்லாம் ஒன்றிரண்டு வருஷம் போடுவதைவிட அனுபவம் பெற்றவர்களை போடுவது நன்றாக இருக்கும் என்று அந்த முறையைக் கையாண்டு வருகிறோம்.

* 191 *Q*.—SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state the reasons for closing the Primary Health Centre at Jamnaputtur in the North Arcot district?

THE HON. SRI M. A. MANICKAVELU : No Primary Health Centre was ever opened at Jamnaputtur.

SRI S. M. ANNAMALAI : ப்ரைமரி ஹெல்த் சென்டர் ஒன்று ஜவ்வாது மலை மீது இருந்தது. அந்த ஒரு சென்டரும் காவனூருக்கு மாற்றப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையா ? அப்படியாயின் அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி என்னிடம் தகவல் ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினர் அதைப்பற்றி ஏதாவது குறிப்பாக எழுதியனுப்பினால் அதை நான் கவனிக்கிறேன்.

Cement factory for North Salem

* 192 *Q*.—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start a cement factory in the North Salem making use of the raw materials available there?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.